பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி
சென்னை – 4

09-08-2025 SATURDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1. மகளிருக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம், நாட்டின் வளர்ச்சியை உச்சத்திற்குகொண்டு செல்ல முடியும் என்று மத்திய அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

2. தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக மத்திய இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் குற்றம் சாட்டியுள்ளார்.

3. இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட தமிழக மீனவர்களை விடுவிக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

4. மாணவர்களின் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மாநில அரசு கூறியுள்ளது.

5. உலக விளையாட்டுப் போட்டிகளின் வில்வித்தைப் பிரிவில் இந்தியாவின் ரிஷப் யாதவ் வெண்கலப்பதக்கம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள்-

<<<<<<>>>>>

மகளிருக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம், நாட்டின் வளர்ச்சியை உச்சத்திற்குகொண்டு செல்ல முடியும் என்று மத்திய வேளாண் அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்துள்ளார்.

மத்தியப்பிரதேச மாநிலம் போபாலில் நடைபெற்ற ரக்ஷா பந்தன் நிகழ்ச்சியில் பங்கேற்று பேசிய அவர், பெண்களுக்கு சமூக பொருளாதார அரசியல் துறைகளில் அதிகாரம் அளிக்கும் வகையில் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு பணியாற்றி வருவதாக கூறினார். ரக்ஷா பந்தன் பண்டிகை சகோதரத்துவத்துக்கு எடுத்துக்காட்டாக உள்ளது என்றும், இதுபோன்ற பண்டிகைகள் சகோதரிகளின் முன்னேற்றத்திற்காக பணியாற்ற வேண்டும் என்ற உத்வேகத்தை அளிப்பதாக உள்ளது என்றும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.

<<<<<<>>>>>

தமிழகத்தில் சட்டம் – ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன் தெரிவித்துள்ளார்.

நீலகிரி மாவட்டம் உதகையில், இல்லந்தோறும் தேசியக்கொடி ஏற்றும் இயக்கத்தை இன்று அவர் தொடங்கிவைத்து பேசினார்.

*(Voice Byte – எல். முருகன் - 42 Sec. )*

<<<<<<>>>>>

நாட்டில் மின்னணு நிர்வாக நடைமுறைகளை ஊக்குவிக்கும் நோக்கில், 7 பிரிவுகளில் மின் ஆளுகைக்கான தேசிய விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2026-ஆம் ஆண்டுக்கான சிறந்த மின் ஆளுகைக்கான தேசிய விருதுக்கு விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை மத்திய அரசு வெளியிட்டுள்ளது.

இந்த விருதுக்கான பரிந்துரைகளை செப்டம்பர் மாதம் ஒன்றாம் தேதி முதல், [www.nceg.gov.in](http://www.nceg.gov.in) என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலம் சமர்ப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கான கடைசி நாள் ஆக்டோபர் மாதம் 15-ஆம் தேதியாகும்.

இதில் தங்கப்பதக்கம் பெறும் விருதாளருக்கு 10 லட்சம் ரூபாய்க்கான ஊக்கத்தொகையும், வெள்ளிப்பதக்கம் பெறும் விருதாளருக்கு 5 லட்சம் ரூபாய் ஊக்கத்தொகையும் வழங்கப்படும்.

<<<<<<>>>>>>

தொலைத்தொடர்புத்துறையின் ஆதாரங்கள் தவறாக பயன்படுத்தப்படுவதை தடுக்கும் வகையில், மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இதன் ஒருபகுதியாக, தொலைத்தொடர்புத்துறையின் பாதுகாப்பு அம்சங்களை மேம்படுத்தும் வகையில் செயல்படுத்தப்பட்டுவரும் *Sanchar Saathi* மொபைல் செயலியை கடந்த ஆறு மாதங்களில் பதிவிறக்கம் செய்துள்ளவர்களின் எண்ணிக்கை 50 லட்சத்தை கடந்துள்ளது.

நாட்டின் பன்முகத்தன்மையை கருத்தில் கொண்டு ஆங்கிலம், இந்தி உள்ளிட்ட 21 மொழிகளில் இந்த செயலியின் பயன்பாடு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

போலி அழைப்புகள், நிதி மோசடி மற்றும் தவறான தகவல்கள் குறித்த புகார்களை இந்த செயலி வாயிலாக எளிதில் மேற்கொள்ளலாம்.

மேலும் இந்த செயலி வங்கிகள், வங்கி சாரா நிதி நிறுவனங்கள், யுபிஐ சேவை வழங்கும் நிறுவனங்கள் வாடிக்கையாளர்களை பாதுகாக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் உதவுகிறது.

<<<<<<>>>>>>

இலங்கை கடற்பகுதியில் அத்துமீறி மீன்பிடித்ததாக கூறி, தமிழக மீனவர்கள் ஏழு பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

ரமேஸ்வரத்தைச் சேர்ந்த இந்த மீனவர்களின் ஒரு விசைப்படகையும் அவர்கள் பறிமுதல் செய்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே, இலங்கை கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களையும், அவர்களது படகுகளையும் உடனடியாக விடுவிக்க மத்திய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில், இதுபோன்ற சம்பவங்கள் மீனவர்களிடையே அச்சத்தையும், நிதி நெருக்கடியையும் ஏற்படுத்தியுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதை தடுக்க நிரந்தர தீர்வுகாண வேண்டும் என்று முதலமைச்சர் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>>

மாணவர்களின் திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஸ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், மாணவர்களின் மன அழுத்தத்தை குறைக்கும் வகையிலும், போட்டித் தேர்வுகளை எதிர்கொள்ளும் வகையிலும் பாடத்திட்டங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொடக்கக்கல்வி மற்றும் 8-ஆம் வகுப்பு மாணவர்களுக்கு பொதுத்தேர்வு முறையை கட்டாயமாக்குவதன்மூலம் இடைநிற்றல் அதிகரிக்கும் என்று திரு அன்பில் மகேஸ் பொய்யாமொழி கூறினார்.

<<<<<<>>>>>>

விருதுநகர் மாவட்டம் வெம்பக்கோட்டை அருகே வீடு ஒன்றில் பட்டாசு தயாரித்துக்கொண்டிருந்தபோது நேரிட்ட வெடி விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். ஒருவர் காயமடைந்தார்.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்ட காவல்துறையினர் அந்த வீட்டில் சட்டவிரோதமாக பட்டாசு

*தயாரிக்கப்பட்டதாகவும், அதுதொடர்பாக வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தனர்.*

*இதனிடையே, இந்த வெடிவிபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் இரங்கல் தெரிவித்துள்ளார்.*

*உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாயும். காயமடைந்தவருக்கு ஒரு லட்சம் ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்படும் என்று மாநில அரசின் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

<<<<<<>>>>>

*தமிழகத்தில் அடுத்த நான்கு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.*

*எமது செய்தியாளரிடம் பேசிய அவர் இவ்வாறு கூறினார்.*

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் - 48 Sec.)*

<<<<<<>>>>>

*மாவட்டச் செய்திகள்*

*திருவாரூர் மாவட்டம் மன்னார்குடியில் நடைபெற்ற தனியார் வேலைவாய்ப்பு முகாமில் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மாநில அமைச்சர் திரு டி ஆர் பி ராஜா பணி நியமன ஆணைகளை வழங்கினார்.*

-----------------

*திண்டுக்கல் அரசு மகளிர் கலைக்கல்லூரியில் உலக பழங்குடியினர் தின விழாவை மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் தொடங்கிவைத்தார்.*

---------------

திருவள்ளூர் மாவட்டம் திருக்கண்டலம் கிராமத்தில் நடைபெற்ற நிதி உள்ளடக்க முழுமையாக்கல் முகாமில் ரிசர்வ் வங்கியின் துணை ஆளுநர் திரு சுவாமிநாதன் பங்கேற்றார்.

----------------

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் அழகுக்கலை மற்றும் சிகை அலங்கார பயிற்சியில் சேர விரும்பும் மாணவர்கள், இம்மாதம் 30-ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சியர் திரு தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.

--------------

நாமக்கல் – சேலம் தேசிய நெடுஞ்சாலையில் கருங்கல்புதூர் அருகே நேரிட்ட சாலை விபத்தில் கல்லூரி மாணவர் உட்பட இரண்டு பேர் உயிரிழந்தனர்.

--------------------

மதுரை மாவட்டம் வண்டியூரில் மாநில அரசின் மருத்துவ திட்டத்தின்கீழ் பல்நோக்கு சிறப்பு மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது.

-----------------

நாமக்கல் மாவட்டத்தில், தமிழ்நாடு தூய்மைப்பணியாளர் நல வாரியம் சார்பில் 96 தூய்மைப் பணியாளர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

--------------

*பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் நாய்களுக்கு, வெறிநாய்கடி தடுப்பூசி செலுத்தும் முகாம் இன்று தொடங்கியது.*

*<<<<<<>>>>>>*

*உலக விளையாட்டுப் போட்டிகளின் வில்வித்தைப் பிரிவில் இந்தியாவின் ரிஷப் யாதவ் வெண்கலப்பதக்கம் வென்றார்.*

*சீனாவில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் அவர் இப்பதக்கத்தை கைப்பற்றினார்.*

-------------

*ஆசியகோப்பை கூடைப்பந்து போட்டியில் இந்தியா இன்று சவுதி அரேபியாவை எதிர்கொள்கிறது.*

*ஜெட்டாவில் இப்போட்டி இரவு மணி 8.30-க்கு தொடங்குகிறது.*

*<<<<<<END>>>>>>*